Class Register Number | | |

PRIMARY SCHOOL

CONTINUAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE

PAPER 2

PRIMARY 5 (Standard Stream)

BOOKLET A

Name: ____________________ Class: 5

41 Questions

90 Marks

Total Time for Booklets A and B: 1 Hr 40 Mins

Parent's Signature / Date:

| | Marks |
|---|---|
| Booklet A | / 46 |
| Booklet B | / 44 |
| Total | / 90 |
| 100 % | |

INSTUCTIONS TO CANDIDATES


1. Write your Index No. in the boxes at the top right hand corner.
2. Do not turn over this page until you are told to do so.
3. Answer all questions.

www.testpapersfree.com

வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கதை அல்லது கட்டுரை எழுது. அடியிலுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சண்டை



| | |
|---|---|
| பள்ளி முடிந்து | இரத்தம் |
| அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ்த்தளம் | மயக்கம் |
| வாக்குவாதம் | காவலர் |
| சண்டை | தண்டனை |

CA-2
நேர்வுத்தாள் – 3

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

'அ' பிரிவு

A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

ஒரு காட்டில் நரி ஒன்று உணவு தேடி அலைந்தது. அது ஒரு (Q1) ________ அருகில் வந்தது. அங்கே ஒரு (Q2) ________ நீல நிறச் சாயம் இருந்தது. நரி தொட்டியினுள் எட்டிப் பார்த்தது. அப்போது அது தவறி தொட்டிக்குள் விழுந்துவிட்டது. நரியின் (Q3) ________ வால் வரை நீல சாயம் படிந்துவிட்டது. தன் உடல் நீல நிறமாகிவிட்டதைக் கண்டு மற்ற மிருகங்கள் (Q4) ________ கேலி செய்யும் என்று நரி பயந்தது. அது கேலிப் பேச்சிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு திட்டம் தீட்டியது.

(Q5) ________ சென்ற நரி பயங்கரமாக ஊளையிட்டது. அது, "நான் வேற்றுலகத்திலிருந்து வந்திருக்கிறேன். இனி நீங்களெல்லாம் என் அடிமை," என்று பயங்கரமான (Q6) ______ கூறியது. இதுவரை நீல நிற மிருகத்தைப் பார்க்காத மிருகங்கள் பயந்து நடுங்கின.

Q1.
(1) வீட்டிற்கு
(2) வீட்டை
(3) வீட்டின்
(4) வீட்டில்

Q2.
(1) தொட்டிக்கு
(2) தொட்டியை
(3) தொட்டியின்
(4) தொட்டியில்



20

www.testpapersfree.com

Q3. (1) தலையை
(2) தலையில்
(3) தலைக்கு
(4) தலையிலிருந்து

Q4. (1) தன்னை
(2) தனக்கு
(3) தன்னால்
(4) தனது

Q5. (1) காட்டிடம்
(2) காட்டுக்கு
(3) காட்டை
(4) காட்டிடமிருந்து

Q6. (1) குரலுக்கு
(2) குரலை
(3) குரலின்
(4) குரலில்



20

www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் /பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. ________ ஒழியேல்

(1) படிப்பது
(2) கற்பது
(3) ஓதுவது
(4) உழைப்பது

Q8. தேடாது ________ பாடாய் முடியும்.

(1) செய்யின்
(2) அழிக்கின்
(3) சேர்க்கின்
(4) பார்க்கின்

Q9. உண்டிக்கு அழகு ________ உண்டல்.

(1) அளவோடு
(2) விருந்தோடு
(3) பண்போடு
(4) உறவோடு

Q10. ________ நண்பனை ஆபத்தில் அறியலாம்.

(1) அன்பான
(2) உண்மையான
(3) தைரியமான
(4) நேர்மையான



www.testpapersfree.com

Q11. ஒருவர் பொறை _______ நட்பு.

(1) பலர்

(2) இருவர்

(3) நால்வர்

(4) சிலர்

Q12. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்

________ மாணப் பெரிது.

(1) சேலத்தின்

(2) உலகத்தின்

(3) ஞாலத்தின்

(4) வையத்தின்



20

www.testpapersfree.com

B3. <u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ஒரு சமயம் பாபு, தர்மன் என்ற இரு நண்பர்கள் சேர்ந்து <u>வியாபாரம்</u> செய்து நிறையப் பணம் சம்பாதிக்க எண்ணினர். அதனால், அவர்கள் அருகிலுள்ள நகரத்துக்குச் சென்றனர். தர்மனின் புத்திசாலித்தனத்தால் அவர்கள் நன்கு வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினர். பின் அவர்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டனர்.

தங்கள் கிராமத்திற்கு அருகே இருக்கும் ஒரு காட்டு வழியாக அவர்கள் சென்று கொண்டிருந்தபொழுது பாபு திடீரென்று, "நண்பா! இவ்வளவு பணத்தையும் கொண்டு சென்று நமது வீட்டில் வைப்பது நல்லதல்ல. நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம் திருட்டுப் போக <u>வாய்ப்புண்டு</u>," என்று கூறினான். "நீ சொல்வது உண்மைதான். அதற்கு நாம் என்ன செய்வது?" என்று தர்மன் கேட்டான். "நாம் இருவரும் நமக்குத் தேவைப்படும் பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு மீதியை இதோ, இந்த மரத்தின் அடியில் புதைத்து வைத்து விடுவோம்," என்று பாபு பதிலளித்தான்.

அவ்வாறே அவர்கள் தங்களுக்குத் தேவையான பணத்தை எடுத்துக்கொண்டனர். பின் அந்த மரத்தடியில் ஒரு குழியைத் தோண்டி மீதப் பணத்தை அக்குழியில் போட்டு மூடிவிட்டு தங்கள் ஊர் போய்ச் சேர்ந்தனர். பாபுவின் மனம் மரத்தடியில் புதைத்த பணத்தைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அன்றிரவே அவன் அக்காட்டிற்குச் சென்று புதைத்த பணத்தை எடுத்துக்கொண்டான். பின் சில நாட்கள் கழித்து தர்மனிடம் சென்று, " நண்பா, புதைத்த பணத்தைப் போய் எடுத்துக்கொள்வோம், வா" என்று கூறினான். அதற்கு தர்மன் <u>சம்மதித்தான்</u>.

இருவரும் அம்மரத்தடிக்குப் போய்த் தோண்டிப் பார்த்தனர். ஆனால், அக்குழியில் பணமில்லை! "நீ என்னை ஏமாற்றி, நாம் இங்கே புதைத்து வைத்த பணம் முழுவதையும் திருடிவிட்டாய்! வா, நீதிபதியிடம் செல்வோம்," என்று கூச்சலிட்டான் பாபு. "நான் உன்னை ஏமாற்றவில்லை!" என்று தர்மன் கூறியும் அதைக் கேளாமல் அவனை நீதிபதியிடம் அழைத்துச் சென்றான் பாபு.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(10 மதிப்பெண்கள்)



20

www.testpapersfree.com

Q13. நண்பர்கள் எதற்காகப் பக்கத்திலுள்ள நகரத்திற்குச் சென்றனர்?

(1) நட்பை வளர்க்க
(2) வியாபாரம் செய்ய
(3) பணம் சம்பாதிக்க
(4) பணம் சேர்க்க

Q14. பாபு, தர்மன் இருவரும் பெரும் பொருள் ஈட்ட எது துணை புரிந்தது?

(1) பாபுவின் புத்திசாலித்தனம்
(2) தர்மனின் புத்திசாலித்தனம்
(3) இருவரின் புத்திசாலித்தனம்
(4) நகரத்தினரின் புத்திசாலித்தனம்

Q15. சம்பாதித்த பணம் திருட்டுப் போகாமல் இருக்க பாபு கூறிய ஆலோசனை என்ன?

(1) தங்கள் வீட்டில் வைத்துக் கொள்ளலாம் என்றான்
(2) இருவரும் பணத்தைப் பங்கிட்டு எடுத்துக் கொள்ளலாம் என்றான்
(3) காட்டிலேயே விட்டுச் செல்லலாம் என்றான்
(4) காட்டில் ஒரு மரத்தடியில் குழி தோண்டி புதைத்து வைக்கலாம் என்றான்

Q16. அன்றிரவு பாபு என்ன செய்தான்?

(1) பணத்தைச் சுற்றி வட்டமிட்டான்
(2) சிறிதளவு பணத்தை எடுத்துக் கொண்டு மீதத்தைக் குழியிலேயே வைத்துவிட்டான்
(3) புதைத்த பணம் அனைத்தையும் எடுத்துக்கொண்டான்
(4) புதைத்த பணத்தை எடுத்து தர்மனிடம் கொடுத்தான்



20

www.testpapersfree.com

Q17. இக்கதையிலிருந்து பாபு எப்படிப்பட்டவன் என்று கூறலாம் ?

(1) ஏமாற்றுக்காரன்
(2) ஏமாளி
(3) கருமி
(4) பேராசைக்காரன்

B4. <u>சொற்பொருள்</u>

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18. வியாபாரம்
(1) வேலை
(2) வாணிகம்
(3) உழைப்பு
(4) கல்வி

Q19. வாய்ப்புண்டு
(1) உறுதியுண்டு
(2) வழியுண்டு
(3) எண்ணமுண்டு
(4) சந்தர்ப்பமுண்டு

Q20. சம்மதித்தான்
(1) இசைந்தான்
(2) மறுத்தான்
(3) யோசித்தான்
(4) நம்பினான்



www.testpapersfree.com

B5. கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

*விக்டோரியா சாலை*
*மாலைச் சந்தை*
(பெடர்சன் சாலைக்கும் லவண்டர் சாலைக்கும் இடையில்)

**வெள்ளி, ஜூன் 2 முதல் ஞாயிறு, ஜூன் 18 வரை**

- பற்பல கடைகள்! பற்பல பொருள்கள்!
- 100 கடைகளுக்கு மேல்
- மற்றக் கடைகளில் கிடைக்கும் பொருள்களைவிட 20% முதல் 60%

**உங்களுக்காக ...**

- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஆடைகள்
- குழந்தைகளுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் ஏற்ற உடைகள்
- நவீனக் காலணிகள்
- அழகிய வேலைப்பாடுகளையுடைய கைப்பைகள்
- வீட்டு அலங்காரப் பொருள்கள்
- இயற்கை மற்றும் செயற்கை செடிகள்
- ருசியான உணவு வகைகள்

➤ எல்லாப் பொருள்களையும் மலிவு விலையில் வாங்க

**வாருங்கள்! விரைந்து வாருங்கள்!**

வாகனத்தில் வருவோர் லவண்டர் சாலையில் உள்ள அடுக்குமாடி வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனங்களைக் குறைந்த கட்டணத்தில் நிறுத்தலாம்.



20

www.testpapersfree.com

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. மாலைச் சந்தை எப்போது தொடங்குகிறது?

(1) ஜூன் 2
(2) ஜூலை 18
(3) ஜூலை 2
(4) ஜூன் 18

Q22. சந்தையில் விற்கப்படும் பொருள்களுக்கும் மற்றக் கடைகளில் விற்கப்படும் பொருள்களுக்கும் என்ன
வேறுபாடு?

(1) 18 % வரை கழிவு
(2) 20 % வரை கழிவு
(3) 60 % வரை கழிவு
(4) 100 % வரை கழிவு

Q23. எந்தப் பொருள்கள் சந்தையில் கிடைக்காது?

(1) உணவு வகைகள்
(2) அலங்காரப் பொருள்கள்
(3) குழந்தைகளின் ஆடைகள்
(4) மின்னியல் பொருள்கள்



210

www.testpapersfree.com

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

'ஆ' பிரிவு

C6. ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24. என் தந்தை இளகிய __________ படைத்தவர். அவர் பிறர் துன்பப்படுவதைப் பார்த்தால் உடனே உதவி செய்வார். (Q24) (    )

Q25. மாமா தன் மகள் சுமதியின் பிறந்தநாள் படத்தை வீட்டுக்கூடத்தில் காட்சிக்கு வைக்க எண்ணினார். அவர் சுவரில் __________ அடித்துப் படத்தை மாட்டினார். (Q25) (    )

Q26. ஆசிரியர் சளிக் காய்ச்சல் நோய் பரவும் விதத்தைப் பற்றி மாணவர்களுக்கு __________. அவர் கூறியதைக் கேட்ட மாணவர்கள் சுத்தமாக இருப்பதன் அவசியத்தை உணர்ந்தனர். (Q26) (    )

Q27. மாமரத்தில் மாம்பழங்கள் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட பாபுவின் நாக்கில் எச்சில் ஊறியது. அவன் மரத்தில் ஏறி ஒரு மாம்பழத்தை __________ சாப்பிட்டான். (Q27) (    )

Q28. அம்மா வாழைக்காயை வெட்டிக்கொண்டிருந்தபோது தவறி தன் கை விரலை வெட்டிவிட்டார். விரலிலிருந்து வடிந்த இரத்தம் சட்டையில் பட்டு, சட்டையில் இரத்த __________ பதிந்துவிட்டது. (Q28) (    )

| | | | |
|---|---|---|---|
| (1) | மனம் | (2) | ஆணி |
| (3) | விளக்கினார் | (4) | பரித்து |
| (5) | ஆனி | (6) | கரை |
| (7) | பறித்து | (8) | மணம் |
| (9) | விலக்கினார் | (10) | கறை |



21

www.testpapersfree.com

D7. <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

பெரியசாமி என்பவர் ஒரு பெருஞ் செல்வந்தர். தொடக்க காலத்தில் ஏழைத் தொழிலாளியாக இருந்த அவர் பெரும் பணக்காரரானதற்கு அவரது கடின (Q29)________ காரணமாகும்.

பெரியசாமி சிறுவதிலேயே தன் தாய் தந்தையை இழந்துவிட்டார். அவருக்கு (Q30) ________ என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லை. அதனால், தன் பசியைப் போக்கிக் கொள்ள பல இடங்களில் கூலி வேலை செய்தார். பின் ஓர் உணவுக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கு அவர் தன் வேலைகளை மிகவும் (Q31) ________ செய்தார்.

பெரியசாமியின் சுறுசுறுப்பும் கடின உழைப்பும் அவரது முதலாளியை மிகவும் கவர்ந்தது. அவர் பெரியசாமியைத் தன் கடையின் மேற்பார்வையாளராக (Q32)________ பதவி உயர்வு பெற்ற பின்பும் பெரியசாமி தன் கடின உழைப்பை (Q33) ________. அவர் தொடர்ந்து உழைத்தார் ; தான் சம்பாதித்த பணத்தில் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட (Q34)________ சேமித்து வைத்தார். ஒரு சமயம் பெரியசாமியின் முதலாளி உணவுக்கடையை விற்றுவிட்டுச் சொந்த ஊருக்குப் போகப் போவதாகக் கூறினார். அதைக் கேட்ட பெரியசாமி தானே அக்கடையை வாங்கிக்கொண்டார். கடையில் கிடைத்த (Q35)________ கொண்டு அவர் ஒரு மளிகைக்கடையையும் தொடங்கினார். மளிகைக்கடையிலும் அவருக்கு நல்ல வருமானம் கிடைத்தது.

அவரது கடின உழைப்பு நாளடைவில் அவரைப் பெரும் பணக்காரராக்கியது. ஆனால் இன்றும் அவர் உழைப்பதை நிறுத்தவில்லை.

(Q29) (   )
(Q30) (   )
(Q31) (   )
(Q32) (   )
(Q33) (   )
(Q34) (   )
(Q35) (   )

| | | |
|---|---|---|
| 1) உறவு | 2) வேலையே | 3) தொகையை |
| 4) பொறுப்போடு | 5) இலாபத்தை | 6) மறக்கவில்லை |
| 7) பொறுமையோடு | 8) நட்பு | 9) உழைப்பே |
| 10) வைத்தார் | 11) கைவிடவில்லை | 12) நியமித்தார் |

www.testpapersfree.com

D8. <u>சுயவிடைக் கருத்தறிதல்</u>
பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஆபிரகாம் லிங்கன் என்பவர் அமெரிக்காவின் அதிபராக இருந்தவர். அவர் அனைவரிடத்திலும் மிகுந்த மரியாதையுடன் பழகும் குணம் பெற்றவர். ஒரு நாள் அவர் வேட்டையாட காட்டுக்குச் சென்றார். அவர் மிடுக்காக உடையணிந்து தனது குதிரையில் ஏறி வேட்டையாடச் சென்றார்.

வேட்டையாடி முடித்துவிட்டு, லிங்கன் மீண்டும் அவரது இல்லத்துக்குத் திரும்பட குதிரையில் ஏறினார். அவர் செல்லும் வழியில் ஒரு காட்டுப் பன்றி சேற்றுக் குழிக்குள் மாட்டிக்கொண்டு தவிப்பதைக் கண்டார். அவர் அதைக் காப்பாற்ற எண்ணிக் குதிரையைவிட்டு இறங்கினார் தான் அணிந்திருந்த அழகான, தூய்மையான உடையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், சேற்றுக் குழிக்குள் இறங்கினார். காட்டுப் பன்றியைக் காப்பாற்றிவிட்டுச் சேறு பதிந்த உடையுடன் குதிரையில் ஏறி இல்லம் திரும்பினார். சேறு பதிந்த ஆடையுடன் வந்த லிங்கனைக் கண்ட அவருடைய பணியாட்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அவருக்கு ஏதோ துன்பம் ஏற்பட்டுவிட்டது என்று அவர்கள் பயந்துவிட்டனர். அப்போது அங்கிருந்த நிருபர் ஒருவர் லிங்கனிடம் அவருக்கு என்ன நடந்தது என்று கேட்டார். லிங்கன் நடந்ததைக் கூறினார். அதைக் கேட்ட நிருபர் லிங்கன் மிகவும் இரக்க உள்ளம் படைத்தவர் என்று பாராட்டினார். அதற்கு லிங்கன், "என்னைப் பாராட்டாதீர்கள். நான் என் சுய நலத்துக்காகத் தான் பன்றியைக் காப்பாற்றினேன்," என்று கூறினார். அதைக் கேட்ட அனைவரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர். "அந்த பன்றியைக் காப்பாற்றாமல் நான் வந்திருந்தால், அதன் வேதனை மட்டுமே என் நினைவில் இருந்திருக்கும். அதனால் நான் என் மன நிம்மதியை இழந்திருப்பேன். என் மன நிம்மதிக்காகத்தான் நான் அதற்கு உதவினேன். அவ்வாறு செய்தது சுய நலம்தானே!" என்று லிங்கன் சிரித்தவாறே கூறினார். லிங்கன் தனது இரக்க குணத்தை இவ்வளவு தன்னடக்கத்துடன் கூறியதைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர். நிருபர் அன்று நடந்தவற்றைச் செய்தித்தாளில் எழுதி வெளியிட்டார். சேசெய்தியைப் படித்த அமெரிக்க மக்கள் தங்கள அதிபரை எண்ணி பெருமை கொண்டனர்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)



21

www.testpapersfree.com

36. லிங்கன் எத்தகைய குணம் படைத்தவர் ? (3)

37. லிங்கன் காட்டுக்குச் சென்றதன் நோக்கம் என்ன? (2)

38. லிங்கன் தன் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படாதவர் என்பதை நாம் எவ்வாறு அறியலாம் (5)

39) லிங்கனின் பணியாட்கள் பயப்படக் காரணம் என்ன? (3)

21

40) எது அனைவரையும் குழப்பியது ? (3)

41) லிங்கன் பன்றியைக் காப்பாற்றியதற்குக் கூறிய காரணம் என்ன ? (4)



www.testpapersfree.com

ஒரு காட்டில் நரி ஒன்று ...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 4 | 3) 4 | 4) 1 | 5) 2 | 6) 4 |
| 7) 3 | 8) 2 | 9) 2 | 10) 1 | 11) 2 | 12) 3 |
| 13) 3 | 14) 2 | 15) 4 | 16) 3 | 17) 1 | 18) 2 |
| 19) 4 | 20) 1 | 21) 1 | 22) 3 | 23) 4 | 24) 1 |
| 25) 2 | 26) 3 | 27) 7 | 28) 10 | 29) 9 | 30) 1 |
| 31) 4 | 32) 12 | 33) 11 | 34) 3 | 35) 5 | |

36) லிங்கன் அனைவரிடத்திலும் மிகுந்த மரியாதையுடன் பழகும் குணம் படைத்தவர்.

37) லிங்கன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான்.

38) காட்டுப்பன்றி சேற்றுக் குழிக்குள் மாட்டிக் கொண்டு தவிப்பதைக் கண்ட லிங்கன் அதைக் காப்பாற்ற எண்ணி குதிரையிலிருந்து இறங்கினார். அவர் தான் அணிந்திருந்த அழகான தூய்மையான உடையைப் பற்றிக் கவலைப்படாமல் சேற்றுக் குழிக்குள் இறங்கி காட்டுப்பன்றியைக் காப்பாற்றினார்.சேறு பதிந்த உடையுடன் குதிரையில் ஏறி வீடு திரும்பினார். லிங்கனின் இச்செயல் மூலம் அவர் தன் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படாதவர் என்பதை நாம் அறியலாம்.

39) லிங்கன் சேறு பதிந்த ஆடையுடன் வந்ததைக் கண்ட அவரது பணியாட்கள் அவருக்கு ஏதோ துன்பன் ஏற்பட்டு விட்டது என்று எண்ணி பயந்தனர்.

40) லிங்கன் காட்டுப்பன்றியைத் தன் சுயநலத்துக்காகக் காப்பாற்றியதாகக் கூறியது அனைவரையும் குழப்பியது.

41) லிங்கன் பன்றியைக் காப்பாற்றாமல் வந்திருந்தால் அதன் வேதனை மட்டும் தன் மனதில் இருந்திருக்கும். மேலும் அவன் தன் மன நிம்மதியை இழந்திருப்பான். எனவே தன் மன நிம்மதிக்காகத் தான் காட்டுப்பன்றிக்கு உதவினான் என்பதே லிங்கன் பன்றியைக் காப்பாற்றியதற்குக் கூறிய காரணம் ஆகும்.



www.testpapersfree.com

Primary School

Primary 5 : Mock Test

Tamil Language Paper 2 - 2011

Name : ____________________ ( )

Class : 5 / ____

Date :

Marks : / 46

Name of setter :

Booklet A

23 Questions 46 Marks

This booklet has of 9 pages

Total Time : 1 h 40 min

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

Parent's Signature : ____________________

Date : ____________________

21

www.testpapersfree.com